# Egalitaria

An Egalitarians' Initiative

Volume 1, Issue 3
March 2021
Every Month Second Sunday

**INSIDE THIS ISSUE:**

| | |
|---|---|
| Events | 2 |
| Financial Position | 3 |
| Egalitarians Welcomes | 3 |
| Let's Discuss the 'C' Word | 4 |
| 'D'Tales | 4 |
| Special Articles | 5 |

## Women's History Month!

This is women's history month. We feel honored to dedicate this month's newsletter to Justice Ruth Bader Ginsburg, the notorious RBG, who has dedicated their life and career for the empowerment of women. This issue welcomes three women members who have joined us last month -- honestly, a coincidence.

We have decided to adopt *'Egalirtaria'* as our monthly's name. This month's Egalitaria features DTales from caste diversity in the University Madras's masters programme, apart from last month events, curated news articles, book intro and a special piece by a member. Please do read and let us know what you feel.



© JOUER

**Ruth Bader Ginsburg**

**15 Mar 1933 – 18 Sept 2020**

*to*

*the Notorious RBG*

Feminism ... I think the simplest explanation, and one that captures the idea, is a song that Marlo Thomas sang, 'Free to be You and Me.' Free to be, if you were a girl—doctor, lawyer, Indian chief. Anything you want to be. And if you're a boy, and you like teaching, you like nursing, you would like to have a doll, that's OK too. That notion that we should each be free to develop our own talents, whatever they may be, and not be held back by artificial barriers—manmade barriers, certainly not heaven sent.

- Ruth Bader Ginsburg (The Notorious RBG)

# Events in February

- To our RTI application on caste category details of secretaries working under Govt. of TN, the Govt, on 03.02.21, has denied divulging the information on the grounds that the information undermines the privacy of individuals.
- RTI application on detailed process in getting *Irula* community certificate was transferred to the revenue and Disaster Management Department on 05.02.21.
- The Hindu Charitable Trust department of GoTN, on 04.02.21, has denied furnishing the temple-wise movable and immovable property details due to its voluminous.
- Egalitarians YouTube channel was created on Feb 7th.
- Our first-appeal (RTI) to get the *Dr Muthulakshmi Reddy Ninaivu Inter-caste Marriage Assistance Scheme* details was transferred to the Social Welfare department on 12th Feb.
- University of Madras, on 19th Feb, to our RTI request, has furnished the details on caste category wise number of students enrolled in the masters programme during the current academic year.
- RTI applications seeking information on: the number of railway coaches yet to be installed with bio-toilets, social security schemes for the sweepers working under the Indian Railways, department-wise, caste category-wise and gender-wise number of applicants and number of students applied/enrolled in masters and doctoral programme at the TNAU for the current academic year, caste-category wise secretaries recruited through lateral entry under the Min. of Road Transport and Highways were filed between 25th and 28th Feb.
- TN information commission, on 05.02.21, in response to our second appeal, has issued an order to the TNAU to furnish the caste-category wise number of students enrolled in PG and PhD programme in the past twenty years.
- On 27th Feb, through electronic voting, we have decided to adopt 15th July 2020 as our foundation day.
- Our regular monthly meeting was held on 14th Feb. Items such as foundation day, members' birthday celebration, YouTube channel, Ambedkar memorial lecture, sponsoring UPSC aspirants, documenting event photos, collaboration with PeFSSED for instituting computer education centres in Adivasi and Dalit colonies were discussed in detail.




Monthly review meet, 14th Feb 2021

*Fight for the things that you care about but do it in a way that will lead others to join you.*

- *RBG*

# Financial Position

| | |
|---|---|
| Donations (between 1st and 28th Feb 2021) | : Rs. 7500/- |
| Donor | : Members |
| Expenditure (between 1st and 28th Feb 2021) | : Rs. 0.0/- |
| Balance (as on 28th Feb 2021) | : Rs. 22000/- |

**Bank Account Details**

| | |
|---|---|
| Bank | : Axis Bank |
| Account number | : 913010045380268 |
| Account type | : Savings Account |
| IFSC | : UTIB0001449 |
| Account holder | : Manoj K G |
| Mobile number | : 8851583097 |

*Real change, enduring change, happens one step at a time.*

- *RBG*

# Egalitarians Welcomes

Three new members have joined us last month. This makes our total strength sixteen. We are growing. However, group diversity in terms of gender and region remains a concern for us.



EG Revathi



EG Megala



EG Nikitha

# Let's Discuss the 'C' Word

- Sociologist Christophe Jaffrelot in his article (*The Indian Express*, 10th Feb) explores the BJP's upper caste vote bank and the present government's efforts to thwart the democratizing effects of the Mandal I and Mandal II. By shedding light on the proportion of upper caste ministers and members of parliament in BJP vis-à-vis other parties, Jaffrelot connects the threads of massive privatization, lateral entry provision in higher echelons of civil services, reservation for economically weaker sections and undermining social justice by appealing to the upper caste constituency.
- A study by IIT-Delhi (excerpt published in the *ToI*, 19th Feb), shows that upper caste village are twice as likely to get secondary schools than the SC/ST counterparts. Using the decennial census data, the study shows that the public schools are necessary for improving literacy rates among the bottom rung of the spectrum. However, due to systemic caste bias, secondary schools are most often built in dominant caste villages than in the ones where Dalits and Adivasis are a majority.
- RTI data (between 2015 and 2019) shows that the Dalits and Adivasis are under-represented in IIT Madras' and IIT Bombay's (*The Hindu*, 14th & 15th Feb) doctoral programmes. The rate of acceptance for the Adivasis and Dalits in these institutes were way below the rate of acceptance for General category applicants, the data reveals.

*I ask no favor for my sex.*
*All I ask of our brethren is*
*that they take their feet off*
*our necks.*

- *RBG*

# 'D'Tales

We have sought and collected caste-category-wise and gender-wise number of students enrolled for masters degree at the University of Madras in the academic year 2019-20, through the RTI act (access here). Despite being a state university, Univ of Madras has given us the number of students admitted under the OBC category. However, GoTN has no such category as OBC. The data graphics are presented below.



Caste Category wise Percentage of Students Enrollment for Masters at the Univ of Madras 2019-20




**Norm vs. Actual**

| Category | GoTN Norm | Univ of Madras |
|---|---|---|
| ST | 1 | 2 |
| SC (SC+SCA) | 18 | 14.2 |
| BCM | 3.5 | 2.9 |
| OBC (MBC+BC) | 46.5 | 51.1 |

*Notes: i) We acknowledge that OC being the Open Category likely to have ST, SC, OBC candidates in it.*

*ii) We omitted Physically Handicapped category for all practical purposes.*

**நூல் அறிமுகம்**

***EG Surya***

தமிழ் இலக்கிய வரலாற்றில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் எழுத்தாளர், ஆசிரியர் இமையம் அவர்களின் 'பெத்தவன்' நெடுங்கதை வாசிக்க நேரிட்டது.

சாதியே வாழ்வதற்கான உயர்ந்த லட்சியமாகக் கருதி வாழும் மக்கள் தன் ஊரின் சாதியப் பெருமையைப் போற்றி பாதுகாக்க எந்த எல்லைக்கும் செல்ல நேரிடும் என்பதை தோலுரித்து காட்டுகிறது இந்நூல்.

சாதியக் கட்டமைப்புக்குள் அகப்பட்டு கிடக்கும் சமூகம், ஊரின் மானம் காக்கும் பொருட்டு ஒரு தனிமனிதனையும் அச்சாதிய வலைக்குள் பூட்டும் கணம், மனிதன் என்று நாம் கருதும் நாகரிக உயிரினத்தின் வீழ்ச்சியின் தொடக்கமாகவே காண நேரிடுகிறது.

நீயெல்லாம் இந்த சாதியில பொறந்ததாலதான் இந்த சாதிய ஒரு பயலும் மதிக்க மாட்டங்கிறான், ஒரு பொட்டச்சி ஊரையே தலகுனிய வெச்சிட்டா, இது வீம்புக்கு சூரிக்கத்திய முழுங்குற சாதி, கட்றதுக்கு கோமணம் இல்லனாலும் சாதிய வுட மாட்டானுவ, நா வுட்டா இந்த ஊரு வுட்டுடுமா? போன்ற வரிகள் சாதியின் குரூரத்தையும், ஆணாதிக்கத்தின் மனோபாவத்தையும், பெண் தவறு செய்ததால் தான் தன் சாதிப் பெருமைக்கு கலங்கம் ஏற்பட்டது போன்ற மாயையை தொடர்ந்து உருவாக்க

முற்பட்டு கொண்டிருக்கிறோம் என்பதை தெளிவாக படம்பிடித்து காட்டுகின்றன.

எவ்வளவுதான் மூர்க்கத்தனமான சாதி வெறி வெளிப்பட்டாலும், எங்கேனும் ஒரு வறண்ட காட்டில் கிடைக்கும் ஒரு சிறு தேன் துளியாய் மனிதம் என்ற ஒன்று இழையோடிக் கொண்டிருப்பதை பழனி என்ற பாத்திரத்தின் மூலம் மீண்டும் நிரூபணமாக்குகிறது இக்கதை.




நூல்: பெத்தவன்

ஆசிரியர்: இமையம்

பதிப்பகம்: பாரதி புத்தகாலயம்

---

**வெகு தொலைவில் உள்ளது!**

*EG Vignesh*

உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் நிலவுடைமைச் சமூகத்தின் பல கட்டங்களைத் தாண்டியே, தன்னை ஒரு ஜனநாயக சமூகமாக மீட்டுருவாக்கம் செய்துகொண்டது. இதற்கு இந்தி
ஆனால் இந்திய ஜனநாயகம் ஒரு முதிரா ஜனநாயகம் அல்லது முதிர்ந்த ஜன
வார்த்தெடுக்க அடிப்படைவாதத்துடன் போராடிக்கொண்டிருக்கும் ஜனநா

இத்தகைய முதிராத் தன்மையினை நம்மிடம் ஒட்டிக்கொண்டிருக்கும் சில, நிலவுடைமைச் சமூகம் சார்ந்த, பிற்போக்குத்தனங்களை வைத்தே சொல்லிவிடலாம். சாதிய வேறுபாடு, மதத்தின் பெயரால் வன்முறை போன்ற இழிகுணங்கள் இவற்றுள் அடங்கும். இவற்றைப் போலவே அல்லது இதைவிட வன்மமான ஒரு நிலவுடைமைச் சமூக விழுமியமென்றால் அது தனி மனித சுதந்திரத்தை மறுக்கும் தன்மைதான்.

ஆம். நிலவுடைமைச் சமூகம் தனி மனித சுதந்திர மறுப்பின் மீதே தனது சமூக அமைப்பைக் கட்டமைக்கிறது. பெண்களுக்கெதிரான சமூகக் கட்டுப்பாடுகளை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். ஆனால் பாலினம் சார்ந்த சுரண்டல்களினாலும், வன்முறைகளினாலும், சமூக ஒதுக்குதல்களினாலும் பாதிக்கப்பட்ட, இன்றும் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு சமூகம் திருநர் சமூகம்.

உடலால் ஒரு பாலினமாகவும், உணர்வால் இன்னொரு பாலினமாகவும் வாழும், சமூகத்தின் மனிதநேயத்தை சிறிதும் அனுபவிக்காத திருநம்பிகளும், திருநங்கைகளும் இச்சமூகத்தில் தன் ஒரு நாளை நகர்த்துவதென்பது அவ்வளவு எளிதல்ல.

ஒரு குழந்தை வளர அன்பான, அழகான, ஆரோக்கியமான சூழல் எவ்வளவு இன்றியமையாதது என்பதை இக்கட்டுரையைப் படித்துக்கொண்டிருக்கும் யாரும் மறுக்கப்போவதில்லை. ஆனால் அத்தகைய சூழல் ஒரு திருநர் சமூகத்தைச் சார்ந்த குழந்தைக்கு இருக்கிறதா? அவர்கள் தங்கள் பாலினத்தை இனம் கண்டு கொள்ளும் வயதில், தன் சொந்த வீட்டாரே! வசைகளாலும், உடல் ரீதியான துன்புறுத்தல்களாலும் அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் காயப்படுத்துகிறார்கள். இது அந்த குழந்தையின் உளவியலை எந்த அளவுக்கு பாதிக்கும் என்பதைப் பற்றி நம்மில் எத்தனை பேர் சிந்தித்திருப்போம்.

இத்தகைய குடும்ப சூழலிலிருந்து விரட்டியடிக்கப்படும் அல்லது தப்பிப்பிழைக்கும் திருநர்கள் இதைவிட கொடுமையான சமூக சூழலின் பிடியில் சிக்கிக்கொள்கிறார்கள். வாழ்க்கையே கேள்விக்குறியாய் மாறிப்போன திருநர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக பிச்சை எடுக்கிறார்கள், பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாகிறார்கள், தனி மனிதனுக்கு உரித்தான அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டவர்களாகிறார்கள்.

ஒரு சாமானியனுக்கான கல்வி, மருத்துவம், சுகாதாரம், சமூக அங்கீகாரம், தனி மனித சுதந்திரம், சுயமரியாதை என அனைத்தும் பறிக்கப்பட்டவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அணுகுகிறோம்.

கடந்த சில ஆண்டுகளில்தான் இவர்கள் மீதான இரக்க குணத்தை அரசிடமிருந்து பார்க்க முடிகிறது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு (NALSA vs UoI, 2013) திருநர்களை "மூன்றாம் பாலினமாக" அறிவித்ததை ஒரு திருப்புமுனையாகப் பார்க்கலாம். அதன்பிறகு இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 377-ஐ இல்லாமலாக்கியது உச்ச நீதிமன்றம். இது திருநர்களை காவல்துறையின் அத்துமீறல்களிலிருந்து காப்பதையும், எச்.ஐ.வி போன்ற நோய்களுக்கான சிகிச்சை அவர்களுக்குக் கிடைப்பதையும், ஓரளவேனும் உறுதிசெய்கிறது.

எனினும் "மூன்றாம் பாலினம்" என்ற சொல்லாடலே அபத்தமாக உள்ளதென உணர்கிறேன். முதல், இரண்டு, மூன்று என வரிசைபடுத்துவதே சமத்துவமின்மையை உருவாக்கிவிடுகிறது. இத்தகைய சொல்லாடல் திருநராகப் பிறப்பது இயற்கையின் கோட்பாட்டிற்கே எதிரானது எனும் பிம்பத்தைக் கட்டமைக்கிறது. "பாலினம் என்பது இருமை. ஆண், பெண் மட்டும் உள்ளடங்கிய இருமை" இத்தகைய எண்ணமே நம் பிரக்ஞையில் குடிகொண்டிருக்கிறது. இவற்றிற்குள் அடங்காத ஒன்றை நாம் அருவருப்புடன் அணுகுகிறோம்.

2013ம் ஆண்டு உச்சநீதிமன்ற தீர்ப்பு வந்தபோதிலும், இந்திய அரசு திருநர்களின் இருப்பை சட்டப்பூர்வமாக 2019ம் ஆண்டுதான் உறுதிசெய்தது. கிட்டத்தட்ட 6 ஆண்டுகள் தாமதமாக வந்திருக்கும் சட்டம். அதுவும் அவர்களின் பிரச்சினையை முழுவதுமாக அணுகாத ஒரு பெயரளவிலான சட்டம்.

உலக அளவில் பாலின அடையாளம் மற்றும் பாலின ஈர்ப்பு சார்ந்த யோக்யகர்த்தா கொள்கைகள் (Yogyakarta Principles) " மனிதனாய் பிறந்த ஒவ்வொருவரின் உரிமையாக, சுய பாலின பிரகடனத்தை (self-perceived identity)" கூறுகின்றன. ஒரு மனிதன் தான் உளப்பூர்வமாக உணரும் பாலினத்துடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதற்கான உரிமை இது. இந்த உரிமை 2019ல் இந்திய அரசால் கொண்டுவரப்பட்ட சட்டத்தில் மிகவும் லாவகமாக மறுக்கப்படுகிறது. இச்சட்டத்தில் உள்ள பிரிவு எண்: 6 "ஒரு திருநர் தன்னைத் திருநராக பதிவு செய்துகொள்ள மாவட்ட மாஜிஸ்திரேட்டிடம் ஒப்புதல் பெற வேண்டும். அதன் பேரில் அவருக்கான அடையாள அட்டை (திருநங்கை அல்லது திருநம்பி எனக் குறிப்பிடப்பட்ட) வழங்கப்படும்" என்கிறது. அவர் தன்னை எந்த பாலினமாக உணர்ந்தாலும் அவருக்கு திருநர் அட்டைதான். ஒருவர் தன்னை ஆணாக அல்லது பெண்ணாக எதுவாக உணர்ந்தாலும் திருநர் அடையாளமே எஞ்சும்.

அவரை பாலின மறுசீரமைப்பு அறுவைசிகிச்சை அல்லது ஹார்மோன் சிகிச்சைக்கு உட்படுத்திய பின்னரே அவர் விரும்பும் அல்லது அவர் உணரும் பாலினமாக அவரை அரசு அங்கீகரிக்கும். ஆனால் "சிகிச்சைகளுக்கு அப்பாற்பட்டு ஒருவரின் பாலின அடையாளம் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்" என்ற யோக்யகர்த்தா கொள்கைக்கு இது முற்றிலும் முரணாக உள்ளது.

பால்(sex) உடல்ரீதியானது. பாலினம்(Gender) உள்ளம் சார்ந்தது. "ஆண், பெண் என்ற இருமைக்கு அப்பாற்பட்டு பாலினம் என்பது ஒரு அலைக்கற்றைப்போல" என அனைவரும் உணரவேண்டும். இங்கு ஒருவர் தன்னை பெண்ணாக உணரலாம், ஆணாக உணரலாம், அல்லது பால் இருமை நியலகளுக்கு அப்பாற்பட்டவராகக் (non-binary) கூட உணரலாம். இப்படி எதுவாக ஒருவர் உணர்கிறரோ அதுவாகவே சட்டத்தின்படி அவர் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

சட்டத்தில் உள்ள வாக்கிய வடிமைப்புகளிலேயே இவ்வளவு ஓட்டைகள் எனில் அதன் நடைமுறையில் வரும் சிக்கல்களை உங்கள் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன்.

தேசிய சட்ட சேவைகள் ஆணையம் vs யூனியன் ஆஃப் இந்தியா,2013 தீர்ப்பில் உச்சநீதிமன்றம் திருநர்களுக்கான இட ஒதுக்கீடு பற்றி பேசுகிறது. இருந்தபோதிலும், திருநர்களுக்கான "இட ஒதுக்கீடு" (affirmative action) விஷயத்தில் இந்திய அரசின் சட்டம் மௌனம் சாதிக்கிறது. நமது அரசியலமைப்பு சட்டத்தில் பால் சார்ந்த ஏற்றத்தாழ்வுகளுக்கு இட ஒதுக்கீடு தருவதில் எந்த சிக்கலும் இல்லை. திருநர்கள் கல்வி, சமூகம், பொருளாதாரம் என அனைத்து பிரிவுகளிலும் பின்தங்கி இருப்பதில் எவ்வித ஐயமுமில்லை.இருந்தாலும் இந்த மௌனம் தொடர்கிறது.

அடுத்து ஒரு முக்கியமான கேள்வியுடன் இக்கட்டுரையை முடித்துக்கொள்கிறேன். சட்டசபையில், கல்வி நிலையங்களில், வேலைவாய்ப்புகளில் திருநர்களின் இடம் என்ன? ஆணாக பிறந்து பெண்ணாக மாறிய ஒரு திருநங்கை தன்னை பெண் என அடையாளப்படுத்துவதிலும், பெண்ணாக பிறந்து ஆணாக மாறிய ஒரு திருநம்பி தன்னை ஆண் என அடையாளப்படுத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் என்ன? அவற்றையெல்லாம் இந்த சட்டம் பேசியுள்ளதா? என்றால் இல்லை என்பதே என் பதில். நாம் நம்மை ஒரு நவீன சமூகமாக பறைசாற்றிக்கொள்ள வெகுதூரம் செல்லவேண்டியுள்ளது.

*To access the details of the information that Egalitarians sought under the RTI act, please [click here].*

*Egalitarians maintains a repository of Caste atrocities reported in dailies. To access the repository, please [click here].*

***We accept donations***

*To donate, please contact*


*EG Manoj*

*88515 83097*


***To join as a member***

*Please contact*


*EG Rajeswaran*

*8072633868*

*rajeswaranganes@gmail.com*


***We are on Facebook***

*To follow [click here]*

*Egalitarians*

*United for Equality*